ந.க.எண். 335 / 2021

தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம்,
சேத்தூர்.
விருதுநகர் மாவட்டம்.
நாள் : 08-04-2022

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

சென்னை பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.11534/2021/ஐ1 நாள் 05.04.2022இன்படி, விருதுநகர் மாவட்டம், சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி எல்கைக்குள் 2021–2022ஆம் நிதியாண்டிற்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ், நடைபெற உள்ள பணிகள் மற்றும் அதற்குரிய மதிப்பீடு விபரம், செலுத்தப்பட வேண்டிய டேவணித் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி செட்யூல் படிவத்தின் விலை முதலான விபரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து இப்பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரால் அங்கீகாரம் பெறப்பட்ட அலுவலர் ஒருவரால் 26-04-2022-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் பேரூராட்சி அலுவலகத்திற்கு வருகை தந்துள்ள ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் 26-04-2022-ஆம் தேதி பிற்பகல் 3.30மணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிகள் கொடுப்பதற்கான செட்யூல் படிவத்தினை கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொகையினை வரும் 25-04-2022-ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 5.00 மணிக்குள் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இதர விபரங்கள் வேண்டுபவர் பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

நமக்கு நாமே திட்டம் 2021–2022

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்) | செட்யூல் கிரையம் + விற்பனை வரி (ரூபாயில்) | டேவணி தொகை (ரூபாயில்) | வேலை முடிக்கப்பட வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|---|
| 1 | சேத்தூர் தேர்வுநிலைப்பேரூராட்சி வார்டு எண்.14, கட்டபொம்மன் நகர் குறுக்குத் தெருக்களில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் | 21.00 | 6300 | 21000 | 60 நாட்கள் |

-2-

## சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம்
## ஒப்பந்தப்புள்ளிகளுக்கான நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளிகள் சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களாலோ ஒப்பந்தப்புள்ளிக்கான அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கால அட்டவணைப்படி பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை பதிவு அஞ்சல் மூலம் குறிப்பிட்ட தேதிக்குள் கிடைக்குமாறும் அனுப்பலாம். அஞ்சலக கால தாமதத்திற்குப் பேரூராட்சி நிர்வாகம் பொறுப்பு ஏற்காது.

2. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான உறையின் மேல் ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் ஒப்பந்தக்காரர் பெயர், மற்றும் செயல் அலுவரின் முகவரி எழுதப்பட வேண்டும். மற்றும் எந்த வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி என்ற விபரங்கள் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒரு வேலைக்கு ஒரு ஒப்பந்தப்புள்ளிதான் அனுப்பவேண்டும்.

3. ஒவ்வொரு ஒப்பந்ததாரரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள வேலைக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள 1சதவிகிதம் டேவணித்தொகையாக பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தியதற்கான இரசீதை ஒப்பந்தப்புள்ளியுடன் தவறாமல் இணைத்து அனுப்ப வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தாரர்களுடைய டேவணித்தொகை சம்பந்தப்பட்ட வேலைகளுக்கான பிணை வைப்புத்தொகையாக அலுவலகத்தில் தக்கவைத்துக் கொள்ளப்படும். இத்தொகைக்கு பேரூராட்சியிலிருந்து வட்டி எதுவும் வழங்கப்படமாட்டாது. பணிகளுக்கான இறுதி பட்டியலில் நான்கு சதவிகிதம் கூடுதல் டேவணித் தொகை பிடித்தம் செய்யப்படும்.

4. டேவணித்தொகை செலுத்தப்படாத ஒப்பந்த புள்ளிகளும், உரிய படிவத்தின் அனைத்து பக்கங்களிலும் ஒப்பந்தகாரரால் கையொப்பமிடப்பட்டு தரப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறித்த நேரத்திற்கு பின்னர் கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.

5. அரசு ஒப்பந்தப்புள்ளி விதிகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்படும். காரணங்கள் கூறாமல் ஒரு ஒப்பந்தப்புள்ளி அல்லது பெறப்பட்ட அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்கும் அதிகாரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு உண்டு.

6. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பு கிடைத்த தேதியிலிருந்து 3 நாட்களுக்குள் குறிப்பிட்ட படிவம் மற்றும் ரூ.50/- (ஐம்பது) மதிப்பிலான முத்திரைக் காகிதத்தில் தவறாது தனது சொந்தச் செலவில் ஒப்பந்தாரர் வேலைகளை முறையாக முடித்துத் தருவதாக ஒப்பந்தப்பத்திரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு எழுதிக் கொடுக்கவேண்டும். அவ்வாறு ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுக்க தவறினாலோ அல்லது செலுத்தக்கோரிய டேவணித்தொகையை செலுத்தத்தவறினாலோ சமந்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பபட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் இதனால் ஏற்படும் சகல நிதி சம்பந்தமான நஷ்டங்களையும் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரின் டேவணித்தொகையை பறிமுதல் செய்யப்படும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் செலுத்திய டேவணித்தொகை சம்பந்தப்பட்ட நிதியாண்டிற்கான ஆண்டுக்கணக்குகளின் தணிக்கை முடிந்தவுடன் தணிக்கைத்தடை இல்லாத பட்சத்தில் திருப்பி அளிக்கப்படும். தணிக்கையில் ஆட்சேபிக்கப்பட்டுள்ள தொகையினை ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள டேவணியில் ஈடு செய்யப்படும். கூடுதலான தொகையினை செலுத்தப்பட வேண்டியதிருப்பின் தனது சொந்த பொறுப்பில் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டும்.

8. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்ட பின்னர் ஒப்பந்தப்புள்ளியைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் ஒப்பந்ததாரருடைய டேவணித்தொகை பறிமுதல் செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளியை திரும்பப் பெற்றக் கொண்டதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர் பொறுப்பு ஆவதுடன் நஷ்டத்தொகையும் இவரால் செலுத்தப்படவேண்டும்.

9. ஒப்பந்தக்தாரர் மனுவில் பணிகள் மற்றும் பணி செய்வதற்காக சதவீதத்தினை தெளிவாக ஒப்பந்தப்புள்ளிகள் எழுதியிருக்க வேண்டும். அடித்தல், திருத்தல் இருக்கக் கூடாது. அவ்வாறிருப்பின் அடிக்கப்பட்ட இடங்களில் ஒப்பந்தக்காரர் முழுக் கையொப்பம் இட்டிருக்கவேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள இலக்கங்கள் எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

10. ஒப்பந்ததாரர் ஒப்புக்கொள்ளப்பட்ட பணிக்கு இவரால் பயன்படுத்தப்படும் செய்யப்படும் கட்டுமானப் பொருட்கள் மற்றும் குடிநீர் பணி தொடர்பான உபகரணங்கள் ISI தரமானதாகவும் ஆய்வு செய்யும் அலுவலர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கவேண்டும். தரமானதாக இல்லை என்று நிராகரிக்கப்பட்ட பொருட்களை 24 மணி நேரத்தில் வேலை செய்யும் இடத்தில் இருந்து ஒப்பந்தக்காரர் தனது சொந்த பொறுப்பில் அகற்றிக் கொண்டு தரமான பொருட்களை சப்ளை செய்யவேண்டும்.

11. இதில் குறிப்பிட்டுள்ள வேலைகளில் வேலை முடிவுற்று 6 மாத காலத்திற்குள் அதில ஏதேனும் பழுதுகள் ஏற்பட்டால் அதனை ஒப்பந்தகாரர் தனது சொந்த பொறுப்பில் சரிசெய்து கொடுக்கவேண்டும். தவறினால் ஒப்பந்தகாரர் செலுத்தியுள்ள பிணை வைப்புத்தொகையிலிருந்து பழுது பார்க்கப்படும்.

12. செய்யப்படும் பணிகளுக்கு வருமானவரி (தனிநபர் ஒப்பந்தகாரருக்கு 1 சதவிகிதமும் நிறுவனம் எனில் 2 சதவிகிதமும் பிடித்தம் செய்யப்படும்) மற்றும் GST வரி 2 சதவிகிதம் பிடித்தம் செய்யப்படும். (GST வரி கட்டுமானம் மற்றும் சாலை பணிகளுக்கு 10 சதவிகிதம் வணிக வரித்துறை அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீது பட்டியலுடன் இணைக்கப்பட வேண்டும்.)

13. ஒவ்வொரு பட்டியலுக்கும் கட்டிட தொழிலாளர் நலநிதிக்காக ரூ 1% வீதம் பிடித்தம் செய்யப்படும்.

14. சிமிண்ட், கம்பி போன்றவைகள் அரசு ஆணை எண் 5 ந.நி மற்றும் கு.வ.துறை நாள் 5.1.99 ன்படி ஒப்பந்ததாரர்கள் தனது சொந்த பொறுப்பில் வாங்கி பயன்படுத்த வேண்டும். அதற்கான சான்று மற்றும் ரசீதுகள் பட்டியலுடன் இணைக்கப்பட வேண்டும்.

15. திட்ட பணிகள் செய்யும் போது பணி விபரம் மதிப்பீடு இடம் போன்ற அனைத்து விபரங்களையும் கொண்ட விளம்பரப்பலகைகள் ஒப்பந்தகாரர் தனது சொந்த செலவில் பணியிடத்தில் நிறுவ வேண்டும்.

16. பணி தொடங்கும் முன், தொடங்கும் போது, பணி முடிவுற்ற பின்னர் ஆகிய மூன்று நிலை நிழற்படங்கள் எடுத்து பட்டியலின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

19/4/2022

செயல் அலுவலர்
சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி
விருதுநகர் மாவட்டம்.

<u>பெறுநர் :–</u>

சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்கள் அனைவருக்கும்.

<u>நகல் :–</u>

1) தலைவர் மற்றும் துணைத்தலைவர், சேத்தூர் பேரூராட்சி மன்றம்.
2) உதவிப் பொறியாளர், சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி (தொகுப்பு) விருதுநகர் மாவட்டம் – அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
3) அலுவலக கோப்பிற்கு

<u>பணிவு நகல்.</u>

1) பேரூராட்சிகளின் ஆணையர் அவர்கள், சென்னை.
2) விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் / மாவட்ட ஆட்சியர், விருதுநகர் மாவட்டம்.
3) உதவி இயக்குநர், (பேரூராட்சிகள்) மதுரை மண்டலம், மதுரை –20.
4) உதவி செயற்பொறியாளர், மதுரை மண்டலம், மதுரை – 20.